1991 அக்டோபர் 1]

நேரத்தில், மைய அரசிடமிருந்து ஒப்புதல் பெற வேண்டியிருக்கிறது. ஆகவே, இருக்கின்ற நடைமுறைச் சிக்கல்களையெல்லாம் நான் ஏற்கெனவே இந்த மன்றத்திற்குச் சொல்லியிருக்கின்றேன். ஆகவே, இதுகுறித்து இந்த அரசு மிகுந்த கவனத்தோடு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 126. செல்வி கோ. மல்லிகா. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள்.

126—

கொள்ளிடம் ஊற்று நீரை கான்சாகிப் வாய்க்காலுக்கு திருப்புதல்.

* 1143 செல்வி கோ. மல்லிகா :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கொள்ளிடம் ஊற்று நீரை கான்சாகிப் வாய்க்காலுக்கு திருப்பி விவசாயத்திற்கு பயன்பட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இந்தத் திட்டத்திற்கான முதனிலை அறிக்கை தலைமைப் பொறியாளர் (திட்டம் மற்றும் வடிவமைப்பு) அளவில் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 10-05)

செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முகிலைக் கிழித்துக் கொண்டு வெளிவரும் முழு மதியைப் போல, இரண்டாண்டு காலமாக ஆட்சி செய்த இருள் வீணர்களை வீழ்த்தி, இங்கே தமிழகத்தின் விடிவெள்ளியாக விளங்கி, அவையை அலங்கரித்துக் கொண்டிருக்கும் எங்களுடைய அன்புத் தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சி

நூறாவது நாளாக வெற்றி நடைபோட்டு, இன்று வைர விழாவாக நாங்கள் கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்த வேளையில், தலைமைப் பொறியாளரிடம் ஆய்வு அறிக்கை உள்ளது குறித்து பெருமகிழ்ச்சியடைகிறேன். தலைமைப் பொறியாளரிடமிருந்து, அந்த ஆய்வறிக்கையை உடனடியாகப் பெற்று, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத் திட்டத்தைக் கொண்டு வருவதன்மூலம், ஏறத்தாழ ஐயாயிரம் எக்கர் நிலங்களில் இரண்டுபோக சாகுபடி செய்ய இயலும் என்ற காரணத்தினாலே, இதனால் 6,000 டன் கூடுதல் உணவு உற்பத்தி செய்ய வாய்ப்பு இருக்கிறது என்ற காரணத்தினாலே, இந்தத் திட்டம் ஆய்விலே எடுத்துக் கொள்ளப் பட்டு, ஏறத்தாழ 97 இலட்சம் ரூபாய்க்கு ஒரு மதிப்பீடு செய்யப் பட்டு, (Chi f Engin er Planni g and Design) அவர்களிடம் இதற்கான ஒரு ஆய்வு இருக்கிறது. அந்த ஆய்வினை கவனத்தோடு அரசு அளவிலே பரிசிலித்து, நிதியாதாரங்களுக்கு ஏற்ப, செயற்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, வீணாகக் கடலில் கலக்கும் கொள்ளிடம் நீரைத் தேக்கி, கான்சாகிப் வாய்க்கால் வழியாக திருப்பி விடுவதன்மூலம், 20 ஆயிரம் எக்கர் தரிசு நிலங்கள் விளை நிலங்களாக மாறும் விந்தை யான வாய்ப்பு உள்ளதால், இத்திட்டத்தை இந்த ஆண்டே, எங்களது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர் களின் ஆட்சியில் நிறைவேற்றித் தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்குப் பயனளிக்கிற எந்தத் திட்டத் தையும், நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு, கிடப்பிலே போடுவதில்லை. ஆகவே, இதைப்போன்ற பல்வேறு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு ஆய்விலே இருக்கின்றன. எந்தெந்தத் திட்டங்கள், அதிக அளவிலே தமிழ்நாட்டிற்குப் பயன்தரக்கூடிய

1991 அக்டோபர் 1]

திட்டங்களாக இருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் முன்னுரிமை கொடுத்து, இந்த அரசு செய்ய தயாராக இருக்கிறது. அப்படி ஆய்வு செய்கின்றபோது, இந்தத் திட்டத்தினால் அதிக பலன் இருக்கிறது என்று கருதினால், உடனடியாக இந்த ஆண்டிலேயே கூட, அது எடுத்துக் கொள்ளப்படும். எனவே, ஆய்வுக்குப் பிறகு தான் அதைப்பற்றி சொல்ல இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 127—திரு. கு. லாரன்ஸ் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

இரணியல் பாலம் புதுப்பித்தல்

127—

* 1894 திரு. கு. லாரன்ஸ்:

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கல்குளம் தாலுகா இரணியல் பாலம் மிகவும் பழுதடைந்திருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், புதிய பாலம் கட்டிக்கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இந்த ஆண்டு இவ்வேலையை எடுத்துச் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அவர்களுடைய அரசின் இந்த நூறாவது நாளில், எங்களது இதயத்தின் அடித்தளத்திலிருந்து எல்லா